**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

| | |
|---|---|
| **Calender** | **:CC.No.203/2024** |
| **Miscellaneous** | **:** |
| **Preliminary Register** | **:** |
| **Police Station** | **: T-15 Kannagi Nagar PS** |
| **Deposition of witness for** | **:PW1/LW1** |
| | **:** |
| **Name** | **: Egambaram S/o Periyathambi** |
| | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **: 45** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.01.2026.**

**(**எதிரிகள் ஆஜர் **,** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1.நான் தற்பொழுது கூடுவாஞ்சேரி மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2022 அன்று 13.00 மணி முதல் 21.00 மணிவரை பணி நியமிக்கப்பட்டு காரப்பாக்கம் பகுதியில் சுமார் 14.40 மணியளவில் இந்திராகாந்தி மெயின் ரோட்டில் உள்ள கார் வாட்டர் வாஷ் செய்யும் இடத்தில் இருந்து இன்னோவா கார் ஒன்று விஜய் என்னும் நபர் அந்த இனோவா காரை பின்னோக்கி எடுக்க முயற்சி செய்தபோது அங்கு இருந்த இரு சக்கர வாகனத்தின்

மீது மோதி விட்டார். அப்பொழுது அந்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரான சத்யராஜிற்கும் இனோவா கார் ஓட்டுனர் ஆன விஜய்க்கும் தகராறு ஏற்பட்டது. நான் அந்த வழியாக ரோந்து பணிக்கு சென்ற பொழுது என்ன தகராறு என்று கேட்டபோது அப்பொழுது விஜய் என்பவர் தான் தெரியாமல் இரு சக்கர வாகனத்தை இடித்து விட்டதாகவும் அதை நான் சரி செய்து தருகிறேன் என்று கூறிய பொழுதும் சத்யராஜ் என்பவர் என்னை தற்போது உடனே சரி செய்து தர வேண்டும் என்றும் இது தெரிவே என்னுடையதுதான் என்றும் என்னை ஏதாவது செய்து விடுவேன் என்று மிரட்டுகிறார் என்று என்னிடம் கூறினார்.

2.நான் அதற்கு ஏன் இங்கு சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு சத்யராஜ் என்னை போலீஸனா பெரிய இவனா உன்னை யாருடா கூப்பிட்டது என்று கூறி என்னை அசிங்கமாக வார்த்தையால் பேசி எனது சட்டையை பிடித்து இழுத்ததில் எனது சட்டையின் 2 மேல் பட்டங்கள் அருந்துவிட்டன. மேலும் தனது கையால் எனது வலது நெஞ்சில் அடித்துவிட்டார் அப்பொழுது அவர்களது சகோதரர்கள் அவரை அழைத்துச் சென்றனர். நான் உடனடியாக எங்கள் காவல் நிலையத்தில் பாராவிடம் விஷயத்தை கூறிய பொழுது ஆண்டவர் என்னும் பாரா அவரிடம் கூறிய பொழுது அங்குள்ள தலைமை காவலர் குமார் என்பவரை சம்பவ இடத்திற்கு அனுப்பினார்.

3. குமாரும் நானும் சத்யராஜின் வீட்டிற்கு சென்ற பொழுது அங்கு சத்யராஜ் இல்லை பின்பு நான் நிலையம் ஆஜராகி நிலைய அதிகாரியான உதவி ஆய்வாளர் கார்த்திகேயனிடம் புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதியது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரணை அதிகாரி கார்த்திகேயன் விசாரணை செய்தார். ஆய்வாளர் மற்றும் உதவி ஆணையர் அனைவரும் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் ரோந்து பணியில் இருந்ததற்கான ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் காவல் நிலையத்தில் உள்ள பொது நாட்குறிப்பு பதிவில் உள்ளது. சம்பவத்தின் பொழுது என்னுடன் எந்தெந்த காவலர்கள் பணியில் இருந்தார்கள் என்ற விவரத்தை எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. எனது புகாரில் குறிப்பிட்டு இந்த பதிவில் கொண்ட ஜிப்ஸியில் தான் சென்றேன் என்ற வார்த்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. காவல் நிலையத்தில் ஒரே ஒரு ஜிப்ஸி உள்ளதால் நான் அதை குறிப்பிடவில்லை.

2.நான் புகாரில் குறிப்பிட்டுள்ள எதிரி மற்றும் விஜய்க்கு ஏற்பட்ட சண்டையை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஒருவர் கூறி தான் தெரியும் என்றால் நான் நேரடியாக பார்த்தேன். வாகனம் பின்னோக்கி செல்லும் பொழுது இரு சக்கர வாகனத்தை இடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. அதற்கு பின் நடந்த சம்பவத்தை தான் நான் நேரடியாக பார்த்தேன். இவ் வழக்கின் சம்பவம் நடப்பதற்கு முன்பு ஒரு ஆண்டு காலமாக நான் அந்த காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். சம்பவம் நடந்த இடத்தில் வாட்டர் வாஷ் நிலையத்தில் சிசிடிவி கேமராவின் பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் விசாரணை அதிகாரி தான் தாக்கல் செய்திருப்பார்.

3. சம்பவத்தின் போது எனது சட்டை பட்டன் அறுந்து விழுந்ததாக குறிப்பிட்டுள்ளது போல் அந்த சட்ட பட்டன்களை வழக்கின் சொத்துக்களாக சேர்த்து உள்ளனவா என்றால் இல்லை. நான் பணியாற்றும் காவல் நிலையம் என்பதால் நடக்காத

சம்பத்தை மிகைப்படுத்தி நடந்ததாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் சட்டை பட்டன்களை வழக்கு சொத்துக்களாக சேர்த்திருப்பேன் என்றாலும் நான் சேர்க்காததால் இந்த வழக்கு சம்பவம் உண்மையாக நடக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை அடித்ததற்கு விபத்து பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். நான் கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினேன். காவல் நிலையத்தில் உள்ள பொது நாட்குறிப்பை எப்போது வேண்டுமானாலும் எழுதலாம் என்றால் சரியல்ல.

4.நான் அந்த காவல் நிலையத்தில் ஒரு ஆண்டு காலமாக பணி செய்து வந்ததால் எனது பகுதியில் உள்ள வாட்டர் வாஷ் நிலையத்தின் உரிமையாளர் கேட்டு கொண்டு பேரில் பொய்யான சம்பவத்திற்காக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் அதிகாரி என்பதால் உண்மையாக சம்பவம் நடந்திருந்தால் நான் புகார் கொடுக்கும் பொழுது வாகனத்தின் பதிவு எண் மற்றும் அதன் நிறத்தை குறிப்பிட்டு புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அதுபோல் நடக்காததால் நான் அந்த புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

5.நான் சம்பவத்தை பற்றி காவல் நிலைய பாராவிடம் 14.40 மணிக்கு தெரிவித்தேன். காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் வரும் வரை சம்பவ இடத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்ற இடத்தை போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

**Sd/–M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நடுவர்,**
**சோழிங்கநல்லூர்.**